| | |
|---|---|
| மையம் : ______________ <br><br> மேற்பார்வையாளர் <br> கையொப்பம்: ______________ | பெயர்: ______________ <br><br> பதிவு எண்: ______________ <br><br> நாள் : ______________ |

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025

## மேல்நிலை (BA00) – எழுத்துத் தேர்வு

## ஜனவரி–பிப்ரவரி 2026

**நேரம் : 1.30 மணி நேரம்** **மதிப்பெண் : 50**

**பகுதி – 1**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

*Read the following text and answer the questions given below in a single line.* **(5x1=5)**

திருவள்ளுவர் திருக்குறளை எழுதியவர். திருக்குறள் உலகப்பொதுமறை என்றும் சிறப்பாக சொல்லப்படுகிறது. திருக்குறள் = திரு+குறள். திரு என்னும் சொல் பெருமை, மேன்மை, சிறப்பு என்னும் பல பொருள்களை உணர்த்தும். குறள் என்பது இரண்டு அடிகளைக் கொண்ட குறள் வெண்பாவை குறிக்கும். இந்நூல் குறள் வெண்பாவால் எழுதப்பட்டது.

**வினாக்கள் :**

1. திருக்குறளை எழுதியவர் யார்?

______________________________

2. திருக்குறளின் சிறப்பு பெயர் என்ன?

______________________________

3. "திருக்குறள்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதுக.

______________________________

4. "திரு" என்னும் சொல்லின் பொருள் என்ன?

______________________________

5. திருக்குறள் எவற்றால் எழுதப்பட்டது?

______________________________

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.** **(5x1=5)**

*Read the following poem and answer the questions given below in a single line.*

ஆராரோ ஆரிரரே
ஆராரோ ஆரிராரோ!
கண்ணே கண்மணியே
கண்ணுறங்கு கண்ணுறங்கு!

மாசிப்பிறையோ – நீ
வைகாசி மாங்கனியோ !
தேசப் பிறையோ – நீ
தெவிட்டாத மாங்கனியோ !
எங்கள் குலம் மங்காமல்
எதிர்குலத்தார் ஏசாமல்
தங்கமலி பொக்கிசத்தைத்
தானாள வந்த கண்ணோ !

**வினாக்கள் :–**

1. கண்ணுறங்கு – பிரித்து எழுதுக.

______________________________

2. தெவிட்டாத மாங்கனி என்று தாய் யாரை அழைக்கிறாள்?

______________________________

3. கண்ணே கண்மணியே !

______________________________

விடுபட்ட வரியை நிறைவு செய்க.

4. "மங்காமல்" – பொருள் தருக.

______________________________

5. எதிர்குலத்தார் ––––––––––––––இருக்க வந்த கண்ணோ?

______________________________

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**

*Form meaningful sentences using the following words.* **(5x2=10)**

1. வருணனை

___

___

2. பல்சுவை

___

___

3. பிற்பகல்

___

___

4. நன்றி

___

___

5. கடல்

___

___

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

*Answer any Five of the following questions in a few lines.* **(5x4=20)**

1. முன்னேற என்ற தலைப்பிலான இப்பாடலில் இடம் பெறும் அறிவியல் கருத்துகள் யாவை?
2. தாயின் கடமை என்ன? அவள் பெற்ற குழந்தைகளின் கடமை என்ன?
3. ஏனாதி நாதரை வெல்ல விரும்பியவன் யார்? வஞ்சகத் திட்டத்தைத் தீட்டியவர் யார்?
4. எவற்றை கற்க வேண்டும்?
5. மாணவர்கள் ஏன் அரசியலில் வேண்டும்?

6. எதன் வழியே திருவள்ளுவரின் சிந்தனையின் அடித்தளம் நமக்குப் புரிகிறது.
7. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை? எடுத்துக்காட்டு தருக.
8. எண் எத்தனை வகைப்படும். அவை யாவை?
9. தாயுமானவர் இறைவனிடம் அருள் புரியுமாறு எதற்காக வேண்டுகிறார்?
10. பெயர்சொல் வகைகளை எழுதுக.

V. **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**

*Write a letter on any one of the given subjects.* **(1x10=10)**

1. ஓட்டப்பந்தயத்தில் மாநில அளவில் முதலிடம் பிடித்த நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.
2. பிறந்தநாள் விழாவிற்கு நண்பனை வரவேற்றுக் கடிதம் எழுதுக.
3. சுற்றுலா செல்ல பெற்றோரிடம் அனுமதிக் கடிதம் எழுதுக.

**BA00 மேல்நிலை**

**இணையவழித் தேர்வு**

**ஜனவரி–பிப்ரவரி 2026**

**நேரம் : 1 மணி** **மதிப்பெண் : 50**

**I. பின்வரும் கோடிட்ட இடங்களை அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டவற்றிலிருந்து தேர்வு செய்து நிரப்புக.**
**Fill in the blanks with the correct words from the brackets. (10x1=10)**

1. "பள்ளி" என்பது __________________ உதாரணம். (இடப்பெயருக்கு / காலப்பெயருக்கு)
2. வண்மை என்பதன் பொருள்----------------. (வலிமை / வளம்)
3. ஒரு மொழிக்கு அடிப்படையாக இருப்பது __________ (இசை / எழுத்து)
4. __________________ உன் வீடு? (எது / யார்)
5. எழுவாய் வேற்றுமை என்று அழைக்கப்படுவது______________ (எட்டாம் வேற்றுமை / முதல் வேற்றுமை)
6. திருவள்ளுவர் இயற்றிய நூல்_____________. (ஆத்திச்சூடி / திருக்குறள்)
7. பல பொருள்களைக் குறிப்பது __________________ (ஒருமை / பன்மை)
8. தால் என்பதன் பொருள் ----------------- (மூக்கு / நாக்கு)
9. யாப்பு என்றால் _______________ என்று பொருள். (கட்டுதல் / நீக்குதல்)
10. ஏனாதி நாதர் __________________என்னும் ஊரில் பிறந்தார். (எயினூர் / கொற்கை)

**II. பின்வரும் தொடர்கள் சரி அல்லது தவறு என்று வட்டத்துள் ✓ செய்து குறிப்பிடுக. (10x1=10)**
**Mention the following statements are True or False by marking ✓ inside the relevant circle.**

1. சுட்டெழுத்துகள் 'ஏ', 'ஆ' என்பனவாகும். Oசரி Oதவறு
2. சான்றாண்மை என்பது பணிவு, அன்பு, அடக்கம். Oசரி Oதவறு
3. ஏனாதி நாதர் ஒரு சிவனடியார். Oசரி Oதவறு
4. சித்தார்த்தன் ஓர் அந்தணச் சிறுவன். Oசரி Oதவறு
5. கொன்றை வேந்தனை இயற்றியவர் குமரகுருபரர். Oசரி Oதவறு
6. சிற்றிலக்கியங்கள் மொத்தம் 69. Oசரி Oதவறு
7. நெல்லிக்கனி என்பது முக்கனிகளில் ஒன்று. Oசரி Oதவறு

8. இடம் மூன்று வகைப்படும். O சரி O தவறு

9. நீர் வந்தீர் என்பது முன்னிலை இடம் ஆகும். O சரி O தவறு

10. சூரியன் மறையும்போது இருள் சூழ்கிறது. O சரி O தவறு

**III. பின்வருவனவற்றிற்கு உரிய சரியான விடையைத் தேர்வு செய்து (✓) வட்டத்திற்குள் குறியிடுக. (10x1=10)**

**Choose and (✓) tick the correct answer from the following.**

1. சினைப்பெயர்
   - O கப்பல்
   - O சீப்பு
   - O கை

2. நெருப்பை மனிதன் எதன் மூலம் உருவாக்கக் கற்றான்?
   - O வீட்டு விளக்கின் மூலம்
   - O தனது மதி மூலம்
   - O மங்கையர் மூலம்

3. கதிர்வேலன் எத்தனை நாட்களாய் பள்ளிக்கு வரவில்லை என்று ஆசிரியர் கூறுகிறார்?
   - O ஒரு வாரமாக
   - O சில நாடகளாக
   - O பல நாட்களாக

4. அலைப் பூங்கரங்கள் என்ற சொற்றொடர் சுட்டுவது எது?
   - O கரங்கள்
   - O பூக்கள்
   - O அலைகள்

5. மும்பைத் துறைமுகம் மத்திய இரயில் பாதைகளில் இரயில் போக்குவரத்து ஏன் நிறுத்தப்பட்டிருந்தது.
   - O இரயில்கள் தாமதமாக வந்ததால்
   - O தண்ணீர் தேங்கியிருந்ததால்
   - O பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டதால்

6. அஞ்சல் வழியே யாருக்குப் பணம் அனுப்பினார்?
   - O இசுமாயில், அபிதாவுக்கு
   - O இசுமாயில், சுல்தானுக்கு
   - O சுல்தான், காதருக்கு

7. உயர்திணைக்கு எடுத்துக்காட்டு?

- O முருகன்
- O கல்
- O மரம்

8. இசுமாயில் வருமானத்தின் இழப்பை எதன் மூலமாக ஈடுகட்ட முயற்சித்தார்?

- O மீன் வியாபாரம்
- O எடுபிடி வேலை
- O ஓட்டுக்கடைவே

9. எவரெஸ்ட் கம்பெனி மூடப்பட்டதை முதலில் தெரிவித்தவர் யார்?

- O சுந்தரத்தின் மனைவி
- O சிவகாமியின் கணவர்
- O கம்பெனியில் பணம் போட்ட மக்கள்

10. ஆசிய ஜோதி எனப் புகழ்பெற்றவர் ----------

- O மகாவீரர்
- O புத்தர்
- O நேரு

**IV.** **அ. இடப்புறம் கொடுத்துள்ளவற்றிற்குத் தகுந்தவற்றை வலப்புறத்தில் இருந்து தேர்ந்தெடுத்துப் பொருத்துக.**
**Match the corresponding words given on the right with the words given on the left.**

**(5x1=5)**

| | | |
|---|---|---|
| 1. குலம் | – | பாவேந்தர் |
| 2. பராபரம் | – | அமைதி |
| 3. பாரதிதாசன் | – | பெரியபுராணம் |
| 4. நிப்தம் | – | குடும்பம் |
| 5. சேக்கிழார் | – | மேலான கடவுன் |

**ஆ. இடப்புறத்தில் கொடுத்துள்ள தமிழ்ச் சொல்லுக்கு உரிய ஆங்கிலப் பொருளை வலப்புறத்திலிருந்து தேர்ந்தெடுத்துப் பொருத்துக.** **(5x1=5)**
**Match the Tamil word given on the left with the corresponding English meaning given on the right.**

| | | |
|---|---|---|
| 1. அடிப்படை | – | Goal |
| 2. இலக்கு | – | Politics |
| 3. அரசியல் | – | Psychology |
| 4. மறைக்க | – | Basis |
| 5. உளவியல் | – | Hide |

V. **கீழ்க்காணும் ஒவ்வொரு குழுவிலும் உள்ள பொருந்தாத ஒன்றை மட்டும் சுட்டுக.**

**Shoot only the one that does not apply in each of the following groups. (10x1==10)**

1. வாத்து, புறா, பூ, காகம்.
2. ஆண், மக்கள், மாடு பெண்.
3. பள்ளு, பரணி, உலா, கவிதை.
4. ஆப்பிள், வாழை, ஆரஞ்சு, தக்காளி.
5. மட்டைப்பந்து, சதுரங்கம், பரமபதம், தாயம்.
6. வெள்ளை, பந்து, சிவப்பு, பச்சை.
7. யாழ், குழல், கல், வீணை.
8. அரசி, அகிலன், கவிதா, மாலதி.
9. கப்பல், படகு, கட்டுமரம், மகிழுந்து.
10. திராட்சை, மா, பலா, வாழை.

*******